**எதிர்காலத்தை திட்டமிடும் வயதில் முதிர்வுத் தொகை கைகளில்.**

இத்திட்டத்தின் முதிர்வுத் தொகை குழந்தை தன் எதிர்காலத்தை திட்டமிடும் தருவாயில் கைகளில் கிடைக்கும். ஒரு காப்புத் தொகையுடன் இலாபத் தொகையும் சேர்ந்து கிடைக்கிறது. இத்தொகை குழந்தையின் மேற்படிப்பிற்கோ அல்லது திருமணச் செலவுகளுக்கோ பயன்படும் வகையில் அமைந்துள்ளது

**இடர்க்காப்பு தொடக்கம்**

குழந்தைக்கு கீழ்கண்ட அட்டவணையில் கொடுத்துள்ளவாறு காப்பீடு கிட்டுகிறது.

| | |
|---|---|
| திட்டத்தில் சேரும் போது 1 முதல் 4 வரை இருப்பின் வயது | 7 வயது முதற்கொண்டு (7 வயதை அடைந்தவுடன் வருகின்ற பாலிசி நிறைவுத் தேதி முதல்) |
| திட்டத்தில் சேரும் போது 5 முதல் வரை இருப்பின் | பாலிசி தொடங்கிய தேதியிலிருந்து 2 ஆண்டுகளுக்கு பிறகு (2 ஆவதாக வரும் பாலிசி ஆண்டு நிறைவுத்தே |
| திட்டத்தில் சேரும் போது வயது 11 ஆக இருப்பின் | பாலிசி தொடங்கிய தேதியிலிருந்து 1 ஆண்டுகளுக்கு பிறகு வரும் பாலிசி நிறைவுத்தேதி முதற்கொண்டு) |

இடர்க்காப்பு தொடங்குவதற்கு முன்னர் குழந்தை துரதிஷ்டவகமாக இறக்க நேர்ந்தால் அதுவரை செலுத்திய பிரீமியம் திருப்பியளிக்கப்படும்.

**பிரீமிய விலக்குச் சலுகை**

பாலிசி தவணைக் காலத்தில் முன்மொழிபவர் இறக்க நேர்ந்தால் மேற்கொண்டு கட்ட வேண்டிய பிரிமியத்திற்கு விலக்களிக்கப்படுகிறது. மேலும் பாலிசியில் சேர வேண்டிய இலாபத்தொகையும் சேர்க்கப்பட்டு முதிர்வின் போது காப்பீட்டுத்தொகையுடன் வழங்கப்படுகிறது.

இதற்கென சற்றே கூடுதல் தொகையை செலுத்தி இச் சலுகையை பெறவேண்டும்.

**பணத்திற்கு முழு பாதுகாப்பு**

நாம் முதலீடு செய்கின்ற பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் அது பாதுகாப்பானோர் கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்கின்ற தொகை நேர்மையான நிர்வாகம் தெளிவான முதலீட்டுக் கொள்கை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிர்வாகத்தின் வசம் இருக்கிறது.

**இலாபத் தொகை மற்றும் இறுதி கூடுதல் இலாபத் தொகை**

பிரீமியத் தொகையினை முதலீடு செய்வதன் மூலம் கிட்டும் இலாபத்தை எல்.ஐ.சி நிறுவனம் பாலிசிதாரர்களுக்கு வருடா வருடம் கணக்கிட்டு பகிர்ந்தளிக்கிறது. இந்த இலாபத்தொகை முதிர்வின் போதோ அல்லது அதற்கு முந்தைய இறப்பின் போதோ வழங்கப்படுகிறது.

**விபத்துக் காப்பு**

இத்திட்டத்தில் விபத்துக் காப்பு குழந்தை 18 வயதை அடைந்த பின்னரே துவங்கும். இதற்கென தனியாக பிரீமியம் செலுத்தி இக்காப்பினை பெறவேண்டும்.

இதனால் 18 வயதிற்குப் பின்னர் விபத்தினால் இறக்க நேர்ந்தால் ஒரு காப்புத் தொகை கூடுதலாகக் கிடைக்கிறது.

இந்த அறிக்கை, இத்திட்டத்தின் பயன்களை தாங்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் கொண்டது. அதிக படியான அல்லது சட்டரீதியான விளக்கங்கள் பெற பாலிசி பத்திரம் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

**வருமான வரி சலுகைகள்**

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத்தொகைக்கு வருமானவரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப் பாலிசிக்கான பிரீமியத் தொகை நேரடியாக குறைக்கப் படுகிறது. இச்சலுகைக்கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிகளும் இதில் சேரும்).

**Section 10(10D) of IT Act.**

பாலிசி முதிர்வடையும் போது வழங்கப்படும் முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் தொகை இவை இரண்டிற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையாகும்.

**கடன் வசதி**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறலாம். கடன் பெறுவதற்கான விதிமுறைகள் மிக விரைவாகவும் சுலபமாகவும் பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**ஒப்புவித்தல்**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆனால் அப்படி விலகும் போது அதுவரை காப்பளித்ததற்கான தொகை குறைக்கப்படும்.

இந்த அறிக்கை, இத்திட்டத்தின் பயன்களை தாங்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் கொண்டது. அதிக படியான அல்லது சட்டரீதியான விளக்கங்கள் பெற பாலிசி பத்திரம் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.